# ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழா
2021-01-10

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் நூலிலிருந்து வாசகம் 55: 1-11,
எசாயா 12: 2-3. 4. 5-6,
திருத்தூதர் யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5: 1-9,
மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 1: 7-11

## திருப்பலி முன்னுரை:

அன்புக்குரியவர்களே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு விழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். திருமுழுக்கின் வழியாக நாம் கடவுளின் பிள்ளைகளாக ஆகியிருக்கிறோம் என்பதை உணர இன்றையத் திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது.

இறைமகன் இயேசு இந்த உலக வரலாற்றில் தோன்றி, மானிடரான நாம் செய்ய வேண்டியவற்றை தமது எடுத்துக்காட்டான வாழ்வு மூலம் நமக்கு கற்பித்தார். தூய ஆவியின் அருளைப் பெற்று கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழுமாறு, திருமுழுக்கின் வழியாக நாம் அனைவரும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்து இயேசுவைப் போன்று இறைத்தந்தையின் திருவுளத்திற்கு நம்மை முழுமையாக கையளிக்கும் மனம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**எல்லாம் வல்லவரே இறைவா,**
எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும், திருச்சபையின் மக்களை உமது ஊழியர்களாகத் தயார் செய்யத் தேவையான அருளைப் பொழியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**நல்லாயனே இறைவா!**
உமது திருநாமத்தில் திருமுழுக்குப் பெற்றுள்ள நாங்கள் அனைவரும் எம்முடைய வாழ்வாலும், வார்த்தையாலும் உம்மை மகிமைப்படுத்தி: இறையுறவிலும் , ஒழுக்கத்திலும் , ஞானத்திலும் , சமூக உறவிலும் சிறந்து விளங்கி உமக்குகந்த மக்களாக சாட்சிய வாழ்வு வாழவும் அமைதியின் தூதுவர்களாகச் ,செயற்படவும் எம்மை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தூய்மை செய்கிறவரே இறைவா,**
தன்னலம், வெறுப்பு, பகைமை, அநீதி, வன்முறை, பயங்கரவாதம் ஆகியவற்றால் கறை படிந்திருக்கும் இந்த உலகை, உமது அருளாலும் அன்பாலும் தூய்மைப்படுத்தி உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**
நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும், துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணை யினாலும் , இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும் , நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எம்மைத் தேடிவந்த அன்பே எம் இறைவா,**
வேற்றுநாட்டினரான மூன்று ஞானிகளும் ஒன்றிணைந்துக் குழந்தை இயேசுவைத் தேடி ஞானம் பெற்றது போல் இன்றைய சூழலில் இளைஞர்கள் தான் திருச்சபையின் வலுவான தூண்கள் என்பதை உணர்ந்து இன்றைய கலாச்சாரச் சூழலில் தங்களின் தேவையை எடுத்து இறையாண்மையைக் கட்டிக் காத்து இறைமகனின் உடனிருப்பை உணர்ந்து ஒன்றிணைந்துச் செயலாற்ற வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**உம்மைத் தேடியவர்களுக்கு உம்மை வெளிப்படுத்திய எம் இறைவா!**
எங்கள் குடும்பங்களிலுள்ள அனைவரும் உம்மைத் தேடிக் கண்டடையவும், எமது வாழ்வு நடத்தை, செயல்கள், பேச்சு, உடைநடை பாவனை எல்லாம் உலகமாந்தர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய் மாற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்..